[டாக்டர். எச். வி. ஹண்டே]

'The Board has filed cases in the Hon'ble Sub-Divisional Judicial Magistrate Court at Dindigul, against 5 taneries in Dindigul area which did not make the application to the Board for consent within the stipulated time.

எனவே 5 டானரிஸ்மீது நாம் கோர்ட்டுக்கு சென்றிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(33) இராமநாதபுர மாவட்டம் பரமக்குடி வட்ட கிராமங்களில் காலரா நோய் காணப்படுவதாக கூறப்படுகிறது.

திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம் நயினார் கோயில் ஒன்றியத்திலுள்ள கெட்டக்குடி கிராமத்தில் காலரா காரணமாக ஒருவர் இறந்தும் பலபேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமாக உள்ளதால் அப்பகுதி மக்களிடையே ஏற்பட்டுள்ள அச்சம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

இராமநாதபுரம் சுகாதார பகுதி மாவட்ட அலுவலரின் அறிக்கையின்படி, பரமக்குடி வட்டம் நயினார்கோயில் ஊராட்சி ஒன்றியம் போகலூர் ஆரம்ப சுகாதார நிலைய பகுதியைச் சார்ந்த கெட்டக்குடி கிராமத்தில் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 11 ஆம் நாளிலிருந்து 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23-ஆம் நாள் வரை சீதபேதியால், 18 பாதிப்புகள் ஏற்பட்டன. 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20 ஆம் நாளன்று ஒரே ஒரு நபர் இந்நோயினால் மரணமடைந்திருக்கிறார்.

1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17-ஆம் நாளன்று திரு பொன்னையா (45 வயது) என்பவர் தனது மாடுகளை மேய்த்துவிட்டு வீடு திரும்பிய பிறகு, அவருக்கு பச்சைநிறமான வயிற்றுப் போக்கு ஏற்பட்டதன் காரணமாக, அக்கிராமத்திலிருந்து 4 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள ''கார் அடர்ந்த குடி'' என்ற கிராமத்தில் உள்ள ஒரு தனியார் ஓமியோபதி மருத்துவரிடம் சிகிச்சை பெற்றார். 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 20-ஆம் நாளன்று அவருடைய கிராமத்திற்கு திரும்பவும் அழைத்துச் செல்லப்பட்டார். அன்று மாலை 6 மணி அளவில் அவர் இறந்துவிட்டார்.

கவன ஈர்ப்புகள்

(டாக்டர் எச். வி. ஹண்டே)

மற்ற 17 நபர்கள் உள்ளூரிலேயே ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்களால் சிகிச்சை அளிக்கப்பட்டதின் காரணமாக அனைவரும் குணமடைந்தனர். பஞ்சாயத்துத் தலைவரிடமிருந்து தகவல் கிடைத்தவுடன் போகலூர் ஆரம்பச் சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் அவருடைய பணியாட்களுடன், பாதிக்கப் பட்ட கிராமத்திற்குச் சென்று நோய்த்தடுப்பு மருத்துவ நட வடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று மாவட்டச்சுகாதார அலுவல ரால், சுகாதார ஆய்வாளர் (தனி) பாதிக்கப்பட்ட கிராமத்திற்கு அனுப்பப்பட்டு அவரும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர் களுடன் சேர்ந்து தகுந்த தடுப்பு மருத்துவப்பணிகளை மேற் கொண்டார். பாதிக்கப்பட்டோரின் மலத்தில் சீதமும், இரத்தமும் காணப்பட்டன. மேலும் மாவட்ட சுகாதார அலுவலர் மற்றும் சுகாதார அலுவலர் (தனி) இருவரும் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று பொது சுகாதாரப் பணி யாளர்களால் எடுக்கப்பட்ட கொள்ளை நோய் தடுப்புப் பணி களை மேற்பார்வையிட்டுள்ளனர்.

1110 மக்கள் தொகையுள்ள இக்கிராமத்தில் 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாள் வரை 737 நபர்களுக்கு காலரா தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எட்டு பாதிக்கப்பட்ட வீடுகள் பினைல் மற்றும் பிளீச்சிங் பௌடர் கொண்டு "கிருமிநாசினம்" செய்யப்பட்டன. மேலும் குடிநீருக்காகப் பயன்படும் இரண்டு கிணறுகள் குளோரினேஷன் செய்யப்பட்டுள்ளன. ஊரணி நீரின்றி வறண்டுள்ளது. எவருக்கும் வாந்திபேதி ஏற்பட்டதாக தகவல் இல்லை.

மாவட்ட சுகாதார அலுவலர் ஆய்வுக்குப் பின் மேற்கூறப் பட்ட 18 நபர்களும், சீதபேதியால் பாதிக்கப்பட்டனர் என்றும், காலரா நோயினாலோ அல்லது தீவிர வயிற்றுப் போக்கினாலோ பாதிக்கப்படவில்லை என்றும் கருத்துத் தெரிவித்திருக்கிறார். தற்சமயம் அக்கிராமம் பொது சுகாதாரப் பணியாளர்களின் நேரடி கண்காணிப்பில் உள்ளது. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 23 ஆம் நாளுக்குப் பிறகு இந்நோயினால் மேலும் பாதிப்புகள் ஏதும் இல்லை.

திரு. அ. பாலுச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். காலரா நோயைத் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தற்கு நன்றி. நயினார் கோயில் ஒன்றியத்திற்கு என்று தனியாக ஆரம்ப சுகாதார நிலையம் இல்லை. எனவே அப்பகுதிகளில் அடிக்கடி இதுபோன்ற நோய்கள் ஏற்படுகின்றன. உடனடியாக நிவாரணம் தேட முடியவில்லை. எனவே நயினார்கோயில்

ஒன்றியத்திற்கென உடனடியாக ஆரம்ப சுகாதார நிலையம் அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே, ஆரம்ப சுகாதார நிலையம் அங்கே ஏற்படுத்துவதைப் பொறுத்தவரையிலே அதை நாம் பரிசிலனை செய்து நிதிநிலைமைக்கு ஏற்ப ஏற்பாடு செய்ய வேண்டும். 1,110 மக்கள் தொகை உள்ள கிராமத்தில் 737 நபர்களுக்கு காலரா தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறன்,

(34) கேரளாவில் உள்ள மலபார் சிமெண்ட் ஆலையிலிருந்து வரும் புகையால் வாளையார் பகுதி விவசாய நிலங்கள் பாதிக்கப்படுவது

திரு. ஆ. நடராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''பேரூர் தொகுதி, வாளையார் பகுதியிலுள்ள விவசாய நிலங்கள் கேரள மாநில எல்லைக்குள் உள்ள மலபார் சிமென்ட் ஆலையிலிருந்து வெளிவரும் புகை மற்றும் தூசியால் பாதிக்கப்படுவது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

வாளையாரில் உள்ள திருவாளர்கள் மலபார் சிமென்ட் தொழிற்சாலை, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு அருகில் கேரள எல்லைக்குள் உள்ளது. இத் தொழிற்சாலை நாளொன்றுக்கு 1,200 மெட்ரிக் டன் சிமென்ட் தயாரிக்கிறது.

2. தொழிற்சாலை சிமென்ட் தயாரிப்பதற்கு உலர்ந்த முறையை பின்பற்றுகிறது. சிமெண்ட் தயாரிப்பதற்கு மூலப் பொருள் சுண்ணாம்புக்கல் ஆகும். உடைக்கப்பட்ட சுண்ணாம்புக்கல் களிமண்ணுடன் சேர்ந்து தூளாக்கப்படுகிறது. இந்தத் தூள் தண்ணீருடன் கலக்கப்பட்டு சிறு உருண்டைகளாக்கப்படுகிறது. பின்னர் இவை சூளையில் எரியூட்டப்படுகின்றன. கரி இதற்கு எரிபொருளாக பயன்படுத்தப்படுகிறது. இவற்றிலிருந்து கிளிங்கர் பெறப்படுகிறது. இந்தக் கிளிங்கர், ஜிப்சத்துடன் சேர்த்து சிமென்ட் பெறப்படுகிறது.